
மீரா

# ஊசிகள்



# ஊசிகள்

மீரா

அன்னம்
மனை எண்: 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர் - 613 007

ஊசிகள் / © மீரா / முதற்பதிப்பு: 1974 / ஆறாம் பதிப்பு: நவம்பர் 1996 / ஏழாம் பதிப்பு: செப்டம்பர் 2003 / வெளியீடு: அன்னம், மனை எண்: 1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7/ அச்சாக்கம்: ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி/ விலை: ரூ. 30.00

# பரிசோதனை

| | |
|---|---|
| அப்துல் ரகுமான்: | பாலு! 'ஊசிகள்' படித்தாயே எப்படி இருக்கிறது? |
| பால சுந்தரம்: | முன்பெல்லாம் புலவர்கள் 'பாடான் திணை' என்று உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களுக்குத் தான் தங்கள்பாட்டில் இடம்கொடுப்பார்கள். எல்லாம் மாறுகிற காலமிது. இங்கே, ஊசிகளின் கதாநாயகர்கள் ஊழல் பேர்வழிகள். மீராவுக்கு நயமான நகைச்சுவை உணர்வு இருக்கிறது. சமுதாயத்தைக் கூர்மையாக பொதுநல உணர்வோடு பார்க்கிறான். அவனது மொழிப் புலமையும் இதற்குக் கை கொடுத்திருக்கிறது. |
| ரகுமான்: | சரி, மீரா! என்ன நோக்கத்தோடு இந்த ஊசிகளை உருவாக்கியிருக்கிறீர்கள்? |
| மீரா: | சமுதாயத்தின் நோய்க்கிருமிகளைப் பார்க்கிறபோது சங்கடப்படுகிறேன். கோபமும் வருகிறது. ஒரு சுகாதாரமான சமுதாய ஆசை தான் இந்த ஊசிகளை உருவாக்கியது. |
| ரகுமான்: | அப்போ இந்த ஊசிகள், மருந்து ஊசி என்கிறீர்கள். |
| பாலு: | வெறும் ஊசிகளாகக்கூட எடுத்துக்கொள்ளலாமே. குத்தப்படுகிறவர்களுக்கு வலிக்க |

லாம். குற்றப்பிறவிகள், ஊசிகள் எங்களைக் குத்துகிறதே என்று ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை. இவர்களால் குத்தப்பட்ட நல்லவர்களைக் காணும்போதெல்லாம் கவி ஞனுடைய கண்ணும் நெஞ்சும் குத்தப்பட்டி ருக்குமே. அதை நினைத்துப் பார்த்தால் இந்தக் குற்றவாளிகளுக்கு இவை நகக் கண்ணில் ஏற்றும் ஊசிகளாக இருந்தாலும் சரிதான் என்றே படுகிறது. அப்படிப் பார்க்கிற போது இந்த 'ஊசிகள்' உயர்ந்த வையாகவே தோன்றுகின்றன.

ரகுமான்: அப்போ 'குத்த'லாக எழுதப்பட்டிருக்கிற இந்தக் கவிதைகளுக்கு 'ஊசிகள்' என்ற பெயர் நயமாகத்தான் படுகிறது. ஆனால் இந்த மாதிரி 'குத்தல்' எழுத்துக்கள் உயர்ந்த இலக்கியமாக மதிக்கப்படுமா?

மீரா: அது எப்படியோ; என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகையில் உலாவுவதைவிட்ச் சமுதாய நடை பாதைகளைச் செப்பனிடு வதையே முக்கியமாகக் கருதுகிறேன்.

பாலு: சில 'ஊசிகள்' சிலரைக் குறிப்பிட்டுக் குத்துவ தாகப்படுகிறது. பொதுவாக இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்; இல்லையா?

ரகுமான்: எனக்கும் கூட அப்படித்தான் தோன்றுகிறது அகப்பொருள் பாட்டுக்களுக்கு 'ஒருவர் பெயரைச் சுட்டக்கூடாது' என்ற கட்டுப்பாடு இருந்தது போல இத்தகைய கவிதைகளுக்கும் இருந்தால்தான் அவை வெறும் Scandal, ஆகாமல் இலக்கியமாகவும் ஆகும். நிரந்தர மும் கிடைக்கும்.

பாலு: 'Dryden' தன் அங்கதக் கவிதைகளில் ஊரை யும் பேரையும் சுட்டித்தான் எழுதியிருக் கிறார். ஆனால் அவற்றை நீக்கினாலும் கவிதையாக எப்போதும் படித்து ரசிக்க முடியும் என்று T.S. Eliot சொல்லுகிறாரே.

ரகுமான்: அவருடைய கவித்திறமை இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்.

மீரா: 'ஊசிக'ளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல; ஆனால் கருத்து யாரை யும் குறிப்பிடலாம்.

ரகுமான்: தற்காலிகச் சிக்கல்களைப் பாடுவதனால் கவிதை நிரந்தரத்துவத்தை இழந்துவிடும் என்று T.S.Eliot சொல்லுகிறாரே, ஊசிகளில் இப்படிச் சில தற்காலிகச் சிக்கல்களையும் பாடியிருக்கிறீர்களே?

மீரா: ஆமாம்; தற்காலிகச் சம்பவங்களும் வரலா றாவதில்லையா? இவற்றிற்கும் 'Historical Value' இருக்குமல்லவா?

பாலு: 'ஊசிக'ளின் கருத்துக்கள் கற்பனையில்லை என்பதுதான் இவற்றின் வலிமை. கற்பனை யாக இருந்தால் ஊசிகள் தைப்பதற்கு இடம் இல்லாமல் போயிருக்கும்.

ரகுமான்: ஒரு கிழிசலைத் தைக்க வாங்கிய ஊசியை மீண்டும் தேவைப்படும்போது பயன்படுத்தப் பத்திரப்படுத்திக் கொள்வதுபோல் இவை களையும் பத்திரப்படுத்திக் கொள்ளலாம். மீராவின் ஊசிகளில் ஒரு குறிப்பிட்ட தத்துவ நூல் கோக்கப்பட்டிருக்கிறது; இல்லையா?

பாலு: ஆமாம்; நானும் உணர்கிறேன். இப்படித் தன் சார்பை ஓங்கிப் பறையடிப்பதால் இலக்கிய அசுணங்களுக்கு விபத்து ஏற்படாதா?

ரகுமான்: ஏதாவது எடுத்துக் காட்டிச் சொல்லேன்.

பாலு: *'வீரமும் விவேகமும்'* என்ற கவிதையில் 'பாரத மக்கள் ***அமெரிக்கன் ரிப்போர்ட்டரை*** இலவசமாக வாங்கிக் கடையில் நிறுத்துப் போட்டு' அந்தப் பணத்தில் ***'சோவியத் நாடு'*** சந்தா கட்டுவதாகச் சொல்லுகிற இடம். இங்கே இலக்கியத் தன்மையைவிட ஒரு 'பற்று'தான் முன்நின்று முகம் நீட்டுகிறது. அப்படி ஒரு பற்று இருப்பது இலக்கியத் துக்குப் புறம்பானது என்று கூறவில்லை. அந்தச் சார்பு இல்லாதவனும் 'அடடா' என்று பாராட்டும்படியாக அது சொல்லப்பட வேண்டும். அப்போதுதான் அது இலக்கியம் ஆகும். இங்கே ஒரு பிரச்சாரத்தைக் கிண்டல் செய்கிறவன் இன்னொரு பிரச்சாரத்தைப் பற்றினால் ஆதரிப்பதாகத்தான் படுகிறது. இந்தப் பற்று மயக்கத்தில் இந்தியரின் விவே கத்தைப் பாராட்டி எழுத வந்தவன் தன்னை யும் அறியாமல் கேலி செய்திருக்கிறான்.

மீரா: ஆமாம்; அதுவும் என் நோக்கந்தான் ***'சோவி யத் நாடு'*** வாங்குவதோடு நம்மவர்களின் ஆசை நின்று போகிறது. இதற்குமேல் பொது வுடைமைப் பாதையில் நம்மவர்களால் நடக்க முடியாத பலவீனத்தைக் குத்திக் காட்டத்தானே வேண்டும்.

பாலு: அப்படியென்றால் சரி; இருந்தாலும் உன் ***'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்களில்*** உன் ஆன்மா அள்ளி அணைக்க விரும்பும் பேரழகைப்

''புரட்சியில் மலர்ந்த சோவியத் பூமியின்
கூட்டுப் பண்ணைகளை

படங்களில் பார்த்து மலைக்கும்
ஓர் இந்திய உழவனைப்போல்''

*பார்த்து வியப்படைவதாக எழுதியிருந்தாயே இந்த வரிகள் 'தொண்டியன்ன அவள் நலன்' என்பது போல ஓர் இலக்கிய மரபோடும் இருப்பதால் என்னால் சுவைக்க முடிந்தது. அதுபோல இதைச் சுவைக்க முடியவில்லை.*

*ரகுமான்:* *இங்கே **'அமெரிக்கன் ரிப்போர்ட்ட'**ரையும் **'சோவியத் நாட்டை'**யும்* Symbol *ஆக எடுத்துக்கொண்டால் நம்முடைய வெளி நாட்டு உறவுக்கொள்கையை அழகாக விமர்சனம் செய்வதாக ஆகிவிடுகிறதே. அப்படி எடுத்துக்கொண்டால் என்ன?*

*பாலு:* *எப்படி இருந்தாலும் **'கனவுகள்.............'** மீராவுக்கு ஏற்படுத்திய* Image-*ஐ இந்த ஊசிகள் கீறிவிடுமோ என்று நினைக்கிறேன்.*

*ரகுமான்:* ***'கனவு'**களுக்குத் தருகிற இடத்தை 'ஊசி' களுக்கு நிச்சயம் நானும் தரமாட்டேன். ஆனால் ஒருவனுக்கு ஏற்படுகிற ஒரு குறிப் பிட்ட* 'Image' *மாறக்கூடாது என்பது அருவ ருக்கத்தக்க* 'Hero worship, *போல ஒரு* Image Worship' *என்றே நான் நினைக்கிறேன். சுதிபிசகாமல் பாடுகிற வித்வான். ஒருவன் பையில் கையை விடும் திருடனைப் பார்த்துப் போடும் சத்தத்தில் சுதிலயத்தை எதிர்பார்க்கலாமா? இந்தச் சமுதாய நிர்ப் பந்தம் எப்பொழுதும் இருந்து வருகிறது. ஊசிகளில் ஒரு சில கவிதைகளை இன்னும் கொஞ்சம் செறிவாகவும் நயமாகவும் செய்தி ருக்கலாம் என்றே படுகிறது.*

*பாலு:* *எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது உதாரணமாக 'சிவப்பு நாடா'வில் மூன்றா*

வது பத்தியை முழுதுமாக எடுத்துவிட்டால் கவிதை இறுக்கமாக இருந்திருக்கும்.

*மீரா:* பதவிக்கு வருகிறவர்கள் எல்லாம் திரும்பத் திரும்பச் சொல்கிறார்களே தவிரச் 'சிவப்பு நாடா'வை யாரும் நீக்குவதாகத் தெரிய வில்லை என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லும் உத்தியைக்கொண்டு உணர்த்த முயன்றிருக்கிறேன்.

*ரகுமான்:* அப்படி என்றால், கண்ணன் சொல்கிறான் என்று முதலில் போட்டது போலவே 'மூன்றாம் பத்தியையும்' நான்காம் பத்தியை யும் வெவ்வேறு ஆட்கள் சொல்வதுபோல் தலைப்பிட்டு எழுதியிருந்தால் இது இன்னும் பளிச்சென்று தெரிந்திருக்கும் என்று நினைக் கிறேன். 'நான் அவன் நண்பன்' என்பதுகூட ரொம்ப நீளமாக இருக்கிறது. மற்ற கவிதை களோடு இது 'Symmetrical' ஆக ஒத்து அமையவில்லை.

*மீரா:* நூல் முழுவதற்கும் 'Epilogue'ஆக இதைச் சேர்த்திருக்கிறேன். அதனால், மற்றவற் றோடு இது 'Symmetrical'ஆக அமைய வேண்டிய அவசியமில்லை.

*பாலு:* எந்தச் சந்த உணர்வும் இல்லாமல் இன்றைக்கு எழுதப்படுகிற புதுக்கவிதைகளுக்கு நடுவே *'ஊசிகள்'* 'அகவல் ஓசை'யில் அமைந்திருப் பதை நான் வரவேற்கிறேன். இந்தச் சந்தம் கவிதைப் பொருளுக்குக் கைகொடுப்பதால் எனக்குப் பிடிக்கிறது. *'கத்தி வந்தது டும்... டும்', 'உறுமீன் வருமளவும்...', 'கல்வி சிறந்த தமிழ் நாடு', 'உயிருள்ள பத்திரிகை'* போன்ற தலைப்புக்கள் கவிதைக்கு மேலும் நயம் கூட்டுவதாக நினைக்கிறேன். சில புகழ் பெற்ற அரசியல் முழக்கங்கள், இலக்கியத்

தொடர்கள், பழமொழிகள், திரைப்பாடல் வரிகள் இவைகளைப் பொருத்தமாகக் கையாண்டிருப்பதால் கவிதைகளுக்கு வலிமை கூடியிருப்பதாகக் கருதுகிறேன்.

ரகுமான்: பயிற்சியினால் வரும் 'Craftsmanship' கவிதை ஆக்கத்திற்கு எப்படி உதவும் என்ப தற்கு இவை உதாரணங்கள் என்று நினைக் கிறேன். ஒருசில கவிதைகளின் வடிவ மைப்பில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் அவைகளுக்கு, effect கூடியிருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

பாலு: நீ உத்திகளைப் பற்றிச் சொல்லுகிறாய் என்று நினைக்கிறேன். 'ஊசிக'ளில் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட உத்தி கையாளப்பட்டிருப்ப தாக நான் நினைக்கிறேன். சொல்ல வந்த கருத்துக்குப் பகைப்புலமாக முரண்பாடான ஒன்றை நிறுத்திச் சொல்லும் உத்தி திறமை யோடு கையாளப்பட்டிருக்கிறது. ''இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி'' ... 'ஜனநாயக சோஷலிசம்' போன்ற சில கவிதைகளில் ஒரே கல்லில் இரண்டு பழங்களை அடிக்கும் வித்தையை ரசிக்க முடிகிறது. சமுதாயத்தின் ஒரு சில துறைகளைப் பற்றியே திரும்பத் திரும்பச் சலிக்கிற அளவுக்கு குறை சொல்லுகிற சிலரைப் போன்றில்லாமல் பல்வேறுபட்ட துறைகளையும் தயவு தாட்சண்யம் இன்றிச் சாடுவது பாராட்டக் கூடிய அம்சமாக நினைக்கிறேன். ''சட்டத் தின் இரும்புக் கரங்களுக்கும் கிளர்ச்சியின் தீ நாக்குகளுக்கும் தப்பிய நான் இந்தக் கவிதை களின் குத்தலுக்கா திருந்துவேன்'' என்றிருக் கிற தடித்த தோலர்களுக்கு இந்த ஊசிகளைக் காணிக்கையாக்கலாம்.

❖

# அணிந்துரை

## எஸ்.ஏ. பெருமாள்

கவிதை எழுதுவது விதை விதைப்பது போன்றதே. மண்ணைக் கிழிக்காமல் விதைகள் முளைப்பதில்லை. கவிதை இந்த மண்ணைக் கிழித்து முளைத்து வளர்ந்து பிரம்மாண்ட ஆலாவிருட்சமாய் வளர்ந்து நிற்கிறது. இதில் மண் என்றாலும் தேசமென்றாலும் மக்கள்தான். எனவே கவிதையென்பது சமூகத்தைப் புனரமைப்பது, சமூகத்தை மாற்றுவது, அவலங்களை அம்பலப்படுத்துவது என்று புலனாகும்.

கவிஞர்களில் நிறைய எழுதிக் குவித்தவர்கள் முதல், ஒரே ஒரு கவிதை மட்டும் எழுதியவர் வரை பல ரகம் உண்டு. எனினும் கவிஞர் எதைப்பற்றி எழுதினார் என்பதுதான் கேள்வி. கவிதைப் பயணத்தில் தடம் பதித்தவர்கள் மிகச் சிலரே. கவிதையை ஒரு கை வாளாய் பிரயோகித்தவர்கள் தமிழில் வெகு அபூர்வம். அவர்களில் தோழர் மீராவும் ஒருவர். சமூக அநீதிகளைத் தட்டிக் கேட்கத் தூண்டிய கூர்மையான 'ஊசிகள்' தொகுப்பு பிரபலமானது. 1974ல் வெளிவந்தது. உள்ளடக்க ரீதியில் இத்தொகுப்பு பெரும் வெற்றி பெற்றது. இதே காலத்தில் வெளிவந்த அவரது கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் தொகுப்பு என்னை மிகவும் கவர்ந்தது. இதோ தமிழுக்கு ஒரு கலீல் ஜிப்ரான் கிடைத்துவிட்டார் என்று கவிஞர்களையே பேசவைத்தது.

தோழர் மீரா ஒரு கவிஞர் மட்டுமல்ல; அவர் ஒரு இலக்கிய இயக்கம். அன்னம், அகரம் பதிப்பகங்கள் மூலம் ஏராளமான நூல்களை வெளியிட்டார். பல முகமறியாப் படைப்பாளி களுக்கு முகங் கொடுத்தவர். சாமான்யப் படைப்பாளி களைக்கூட அவர்களது நூல்களைதுணிச்சலுடன் வெளியிட்டு, பிற்காலத்தில் அவர்கள் பெரிய படைப்பாளிகளாக வளர்வதற்கு ஒரு ஏணியாய் இருந்தார். அவர்களை நானும் நன்கறிவேன். ஒருவேளை அந்தப் படைப்பாளிகள் இதை மறுத்தாலும் மீரா வெளியிட்ட நூல்கள் அதற்கு நிரந்தரச் சாட்சியங்களாய் திகழுகின்றன. மற்றவர்களைப் பெரிய எழுத்தாளர்களாக்கி அவர்களை அறிமுகம் செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தியதால் அவரது எழுத்துப்பணி குறைந்து போனது தமிழின் துரதிருஷ்டம்.

கவிக்கோ அப்துல் ரகுமான் இந்த 'ஊசிகள்' தொகுப்பு பற்றி ''குத்தலாக எழுதப்பட்டிருக்கிற இந்தக் கவிதைகளுக்கு ஊசிகள் என்ற பெயர் நயமாகத்தான் படுகிறது. ஆனால் இந்த மாதிரிக் 'குத்தல்' எழுத்துக்கள் உயர்ந்த இலக்கியமாக மதிக்கப் படுமா?'' என்று கேட்கிறார். அதற்கு ''அது எப்படியோ; என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகையில் உலாவுவதைவிடச் சமுதாய நடைபாதைகளைச் செப்பனிடு வதையே முக்கியமாகக் கருதுகிறேன்'' என்று மீரா விடையளித் துள்ளார்.

''எல்லாம் மாறுகிற காலமிது. இங்கே ஊசிகளின் கதாநாயகர்கள் ஊழல் பேர்வழிகள். மீராவுக்கு நயமான நகைச்சுவையுணர்வு இருக்கிறது. சமுதாயத்தைக் கூர்மையாகப் பொதுநல உணர்வோடு பார்க்கிறார். அவரது மொழிப் புலமையும் இதற்குக் கை கொடுத்திருக்கிறது'' என்று கவிஞர் பாலசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

இது ஒரு சின்னஞ்சிறு கவிதைத் தொகுப்பானாலும் கீர்த்திமிக்க ஒன்றாகும். கன்னத்திலடித்தாற்போல கவிதை

வரிகள் விழுகிறது. சாதி வெறியில் பிராமணருக்கு மற்றவர்கள் சளைத்தவரல்ல என்பதை -

''தேவ பாஷையில் தேர்ச்சிமிக்க
சாஸ்திரி ஒருவர் சபையில் சொன்னார்;
'ஜாதி வேண்டும்' 'ஜாதி வேண்டும்;
உடனே சீறி ஒரு தமிழ் மறவர்
ஓங்கிக் கத்தினார்; ஓய் ஓய், இனிநீர்
ஜாதி வேண்டும் என்றால் பொறுமையாய்
இருக்கமுடியாது என்னால்
சரியாய்ச்
சாதி வேண்டும் என்றே சாற்றும்...''

எங்கும் சிவப்பு நாடா முறையால் அரசின் பல்வேறு இலாகாக்களில் லஞ்சமும் ஊழலும் தாண்டவமாடுவதை

''நிர்வாகத் தோட்டத்தில்
நீருற்றத் தவறும்
அதிவீர வர்க்கத்தின்
அலட்சியப் போக்கால்
நாங்கள்
நட்டுவைத்த நல்ல லட்சியம்
பட்டுப் போவதைப்
பார்க்கிறோம்... பதைக்கிறோம்''

என்று பாடுகிறார்.

இத்தொகுப்பில் எதிரொலி எனுங்கவிதை மிகவும் குறிப்பிடத்தக்கது. 'ஊருக்குத்தாண்டி உபதேசமெல்லாம்' என்ற பழமொழிக்கேற்ப இக்கவிதை ஆப்பு அறைகிறது. சிக்கனத்தை உபதேசிக்கும் பிரதமரைப் பார்த்து -

''பிரியம் மிகுந்த பிரதமரே
உமது மந்தரி சபையின்

**எண்ணிக்கையை நீர் கொஞ்சம் குறைப்பீர்**
**கொஞ்சம் .....''**

என்று குத்திக்காட்டுகிறது. கவிஞர் மீரா போன்றவர்கள் முப்பதாண்டுகளுக்கு முன்பே சமூகப் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து, அம்பலப்படுத்தித் தடம் பதித்தனர். ஆயினும் பிற்காலக் கவிஞர்கள் இந்தத் தடம் மறந்து சூனிய வெளியில் சஞ்சரித்து இன்றுவரை வெறுமையைத் தரிசித்து வருகின்றனர். புதுக்கவிதையில் தடம்பதித்த வானம்பாடிகளும், மேத்தா, அப்துல் ரகுமான், பாலா, கந்தர்வன் போன்றவர்கள் அந்தப் பதாகைகளைத் தொடர்ந்து ஏந்திப் பவனி வருவது இங்கு நினைவுகூரத்தக்கது.

கல்வி வியாபாரமாகி தற்போது சூதாட்டமாய் கொடிகட்டிப் பறக்கிறது. இதை துவக்க காலத்திலேயே 'கல்வி சிறந்த தமிழ்நாடு, கவிதை மூலம் மீரா அம்பலப்படுத்தினார். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவர் கூறும் தொகைப் பட்டியல் இன்று நமக்கு அற்பமாய் தெரிகிறது. ஆயினும் தமிழக அரசியல் அரங்கம் மட்டும் மீரா கூறுவது மாதிரி -

**''சினிமா அரங்கில்**
**அரசியல் கூத்து;**
**அரசியல் மேடையில்**
**சினிமாச் சண்டை**
**ஒரே கல்லில்**
**இரண்டு மாங்காய்...''**

என்று தொடர்கதையாய் நீள்கிறது.

இந்த ஊசிகளை வாசியுங்கள். சமூகப் பிரச்சனை குறையும், மக்கள் பிரச்சனையும் எப்படிக் கவிதைகளாக்க முடியும் என்பதை அறிவீர்கள்.

மதுரை

**எஸ்.ஏ. பெருமாள்**
மாநில செயற்குழு உறுப்பினர், தமுஎச.





# வேகம்

❖

எங்கள்ஊர் எம்.எல்.ஏ.
ஏழுமாதத்தில்
எட்டுத் தடவை
கட்சி மாறினார்

மின்னல் வேகம்
என்ன வேகம்?

இன்னும் எழுபது
கட்சி இருந்தால்
இன்னும் வேகம்
காட்டி இருப்பார்......

என்ன தேசம்?
இந்தத் தேசம்?

# தமிழ்ப் பற்று

❖

தேவ பாஷையில்
தேர்ச்சி மிக்க
சாஸ்திரி ஒருவர்
சபையில் சொன்னார்;
''ஜாதி வேண்டும்''
''ஜாதி வேண்டும்:''

உடனே சீறி
ஒருதமிழ் மறவர்
ஓங்கிக் கத்தினார்;
''ஓய் ஓய், இனிநீர்
ஜாதி வேண்டும்
என்றால் பொறுமையாய்
இருக்க முடியாது என்னால்
சரியாய்ச்
சாதி வேண்டும்
என்றே சாற்றும்.''

# சுரண்டலாமா?

❖

விழித்துப் பார்த்தேன்
விரலை மெதுவாய்க்
கடித்தொரு பாச்சை
கால்வாங் கியது.

பதைத்துக் கேட்டேன்:
''பாவப் பூச்சியே!
கட்டை விரல் ஏன்
தட்டுப் படாமல்
போனதுன் கண்ணில்?

மெலிந்திருக் கின்ற
சுண்டு விரலைச்
சுரண்ட லாமா?
சுரண்ட லாமா?
சுரண்ட லாமா?''

# வறுமையே வெளியேறு

❖

எட்டு மாதமாய்
எங்கள் தலைவர்
தெருவில் நின்று
செழிக்கச் செய்தார்
முழக்கம்....
வறுமை
வெளியே றிற்றா
விரைவாய்......?

நேற்று
செட்டியார் வீட்டுத்
திருமணப் பந்தியில்
எதுவும் பேசாது
எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்....
வறுமை,
வேக வேகமாய்
வெளியே றிற்று -
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக......!

# மேயர் மகன்
# தோட்டி மகனுக்குக்
# கூறியது

❖

குப்பா! குப்பா!
உன்னைப் பெற்ற தந்தைக்கு
உன்னைத்தானே
அடிக்கத் தெரியும்

என்னைப் பெற்ற தந்தைக்கு
இந்த ஊரையே
அடிக்கத் தெரியும்

இப்போதேனும்
ஒப்புக் கொள்ளேன்
என்றன் தந்தை
தானே பெரியவர்....
வணக்கத்திற்குரியவர்....

# காதலோ காதல்

❖

'காதல் என்ன
கத்தரிக் காயா'
என்ற தொடர்கதை
'இரவில்' எழுதிய
வாணி மணாளன்
பகலில்
வாரச் சந்தையில்
கிலோ விலை ரூபாய்
இரண்டெனக் கேட்டதும்
அயர்ந்தார்; கண்களை
அகலத் திறந்தார்,,...

காய்கறிக் காரன்
கடுப்பில் கேட்டான்
'அத்தனை மலிவாய்
அள்ளிக் கொள்ள
கத்தரிக்காய் என்ன
காதலா...?'

# பழக்கம் பொல்லாதது

❖

ஆராவமுதன்
அமைச்சர் பதவியை
இழந்து வருந்தி
இருந்த ஓர் இரவில்
அருகில் தூங்கிய
ஆசை மனைவியைச்
சும்மா சும்மா
சுரண்டலானார்:
அம்மாகேட்டார் ஆத்திரத்தில்:

''ஏன்தான் உங்களுக்கு
இன்னும் அந்தப்
பொல்லாப் பழக்கம்
போகவில்லையோ?''

# வயிற்றுப் பா(ட்)டு

❖

என்னை யாரோ
என்று நினைத்துப்
புலவன் ஒருவன்
புகழத் தொடங்கினான்:

'நீண்ட கண்கள்
கூரிய நாசி
அகன்ற நெற்றி
அழகிய பற்கள்
வயிரத் தோள்கள்
மலைபோல் மார்பு,

தொடர விடாமல்
இடையில் பாய்ந்தேன்:

'ஓகோ உனக்கு
ஒட்டிய வயிறு
போலும்...'

# ப(ா)ட்டி மன்றம்

❖

பாட்டி செத்த பத்தாம்வினாடி
பெரிய குழப்பம் -
பிணத்தை
எரிப்பதா புதைப்பதா என்று

உள்ளூர்ப் புலவர் ஓடி வந்தார்
பட்டி மன்றம் வைத்துப்
பார்த்தால் என்ன என்று

# ஆனை மாதிரி

❖

அப்பு சாமியின்
அப்பா
ஆனை மாதிரி!

இருந்த போது
எம்.பி. பதவி...
இறந்த போது
சிவலோக பதவி...

அப்பு சாமியின்
அப்பா
ஆனை மாதிரி!

# பொறாமை

❖

ஓ! ஓ! செல்வம்
உடைய பெரியீர்!
உங்க ளால்தாம்
பாரி ஆக
முடிய வில்லையே...

அதுகளேனும்
நக்சல்
பாரி ஆகிப்
போனால் என்ன?

புழுங்கி ஏன்நீர்
பொறாமைப் படுகிறீர்?

# சிவப்பு நாடா?

❖

## கண்ணன் சொல்கிறான்

சிவப்பு நாடா எங்கும்....
சீராக்க வேண்டும்....
சீராக்க வேண்டும்....

ஊராட்சி ஒன்றியப்
படிக்கட் டிலிருந்து
தலைமைச் செயலக
உச்சி வரையில்
சிவப்பு நாடா எங்கும்....

நிர்வாகத் தோட்டத்தில்
நிரூற்றத் தவறும்
அதிகார வர்க்கத்தின்
அலட்சியப் போக்கால்
நாங்கள்
நட்டு வைத்த
நல்ல இலட்சியம்
பட்டுப் போவதைப்
பார்க்கிறோம்... பதைக்கிறோம்.

திருநீல கண்டர்தம்
திருக்கை படாமல்
பலகைமேல் கொஞ்சமும்
'கட்டு'(க்)குலையாது
காட்சி யளிப்பதால்
நாங்கள்
தேனாய் நினைத்துத்
தீட்டிய திட்டம்
ஈனா திருப்பதைப்
பார்க்கிறோம்... இளைக்கிறோம்.
சிவப்பு நாடா எங்கும்
சீராக்க வேண்டும்... டும்... டும்..

மீரா கேட்கிறாள்

இது என்ன
சிவப்பு நாடா?

# அடியேன் பறைவது...

❖

எனக்குத் தெரிந்த வரைக்கும்
இலட்சக் கணக்கில் இங்கே
உனக்குத் தானே
மாபெருங் கூட்டம்

கூட்டம்
திரண்டு வருவதைத்
தெரிந்து கொண்டும்
தேர்தல் வருவதைப்
புரிந்து கொண்டும்
இப்படிச் சிலையாய்
இருக்கின் றாய்ஏன்?

ஏன் ஏன்?
இப்போது கூடக்
காலம் வீணாய்க்
கடத்தாமல் புதுக்
கட்சியைத் தொடங்கினால்
கண்டிப்பாக
ஆட்சியைப் பிடிக்கலாம்...
அடியேன் பறைவது
மெய்யப்பா-
ஐயப்பா!

# பெருங்காயம்?

❖

சிந்தனைக் குரிய
செய்திகள் மூன்று:

மேக மலையில்
விமான விபத்து......
மூன்று பேர்க்கு
முதுகில் காயம்.

ஜெஸ்ஸூர் முனையில்
நடந்த சண்டையில்
முப்பது பேர்க்கு
முகத்தில் காயம்

சித்திரை வீதியில்
சினிமா நடிகை
ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீயைத்
திக்கு முக்காடச்
செய்த கும்பலில்
சிக்கிய அறுபது பேர்க்கு
முதுகில் முகத்தில்
நெஞ்சில் காயம்!

# ஜனநாயக சோஷலிசம்

❖

ஐந்து வருடம்
முடிந்தால் தேர்தல்
என்பதை மாற்றி
இங்கே
வருடா வருடம்
வைத்தால் போதும்.

பெரும் பெரும்
புள்ளிகள் எல்லாம்
வெள்ளிப் பணத்தை
அள்ளி இறைப்பார்
ஆடிக் கரைப்பார்

சுலப மாகச்
சோஷ லிசத்தை
அடையும் வழியிது;
அற்புத வழியிது.

# குப்பையிலே மாணிக்கம்

❖

கருப்புப் பணத்தைக்
கண்டு பிடிக்கும்
அதி தீவிர
அதிகாரிகள்
பம்பாய் நகரில்
பகலிலுங் கூடப்
பளபளக்கும்
ஒரு
நட்சத்திரத்தின்
பங்களா வுக்குள்
ஒரு
கோடியில் கிடந்த
குப்பைக் கூடையில்
மதிப்பு மிக்க
மாணிக்கங்களைத்
தேடி எடுத்துத்
திகைப்படைந் தார்களாம்!

'குப்பையிலே
மாணிக்கம்'
என்று நம் முன்னோர்
சும்மாவா சொன்னார்!

# முடிவெட்டுவோர் முணுமுணுப்பு

❖

முன்பெல் லாம்
முடிவளர்ப் பார்கள்...
திருப்பதி பழனி
திருச்செந் தூர்போய்
மொட்டை அடிக்க!

இப்போ தெல்லாம்
நாக ரிகத்தை
வளர்க்கிறோம் என்று
முடிவளர்ப்பார்கள்
எங்களை
மொட்டை அடிக்க!

# பறக்க விடலாம்

❖

கோட்டும் சூட்டும்
போட்டுக் கொண்டு
வீட்டுப் படியை
மிதித்த போது
கையில் என்ன
என்றான் தம்பி

கண்ணில் ஏறிக்
கர்வம் நிற்க
வேந்தர் மூவர்
வெற்றிக் காகத்
தந்த பட்டம்
என்று கூறிப்
பார்த்தேன்; தம்பி
பாய்ந்தான் புலியாய்!

எங்கே என்றுநான்
இரைந்து கேட்டேன்...

''நூல் வாங்க......
நூல் வாங்க...''

# இரண்டு பிணங்கள்

❖

இரண்டு பிணங்கள் எதிரெதிரே!

மருத்துவர் வந்தார்
அறுத்துப் பார்த்தார்
தற்கொலை என்றார்... சென்றார்
இரண்டு பிணங்கள் எதிரெதிரே!

நடைப்பிணமாக
நாளைக் கழித்து
நாடகம் முடித்த தொன்று...
கடைப்பிண மாகக்
காசைப் பெருக்கிக்
கதையை முடித்த தொன்று...
இரண்டு பிணங்கள் எதிரெதிரே!

மூட்டை தூக்கிப்
பிழைக்கவும் முடியாப்
பூச்சி,
மூட்டைப் பூச்சி மருந்தைக்
குடித்தான்... உடனே
குளிர்ந்துபோனான்... போனான்

வைர வியாபாரி
மன்னார்சாமி -
வாயில்
வைரக்கடுக்களை நுணுக்கிப்
போட்டான்... உடனே
விறைத்துப் போனான்...
போனான்...

ஓ......
செத்தாலும்
மேன்மக்கள் மேன்மக்களே!

# கடவுளைத் தேடி

❖

''இருக்கிறார் கடவுள்
இல்லை கடவுள்?''
வாதம் பிறந்தது;
மோதல் வளர்ந்தது.

இப்போது,
இல்லை ஒருவர் இங்கே
இருக்கிறார் ஒருவர்
தலைமறை வாக!

போத்தனூர்க் காவலர்
புலனாய் கின்றார்!

# நமக்கினி பயமேது?

❖

பஞ்சாப் பீகார்
பகுதியி லிருந்து
கொண்டு வந்த
கோதுமை மூட்டையில்
இரும்புத் தூள்கலந்து
இருப்ப தாகக்
கண்டு பிடிக்கப்
பட்டதாம்...... நமக்கினி
பயமே இல்லை

எங்கும்
இரும்பு மனிதரை
எதிர்பார்த் திடலாம்.

# சிகப்பு விளக்கு எரிகிறது

❖

எச்சரிப்பதிலே
எங்கள் பட்டணப்
பெண்கள் நல்லவர்...
பெரிதும் நல்லவர்!

தொலைவில் வருவோர்
விலகிச் சென்றிட
உதட்டில் சாயம்
ஒளிவிட வருவார்...

உபாயம் தெரிந்தவர்
உடனே தப்பலாம்,
அபாயம் அருகே
வராதீர் என்றே
எச்சரிப்பதிலே
எங்கள் பட்டணப்
பெண்கள் நல்லவர்...
பெரிதும் நல்லவர்.

# புரோகிதரே போதும்

❖

''வந்து திரும்ப
வழிச்செல வுத்தொகை
இருநூற் றைம்பது
ஏ.சி வசதி
இருக்கும் விடுதி
சுண்டக் காய்ச்சிய
பசும்பால் முந்திரிப்
பருப்பு முடிந்தால்
முயல்கறி மான்கறி
முக்கியம் பிரியாணி''

கடிதக் குறிப்பைக்
கண்டதும் ஆசையாய்
புதுமைத் திருமணம்
புரியக் கருதிய
தனபா லனுக்குத்
தலைசுற் றியது;
அவனையும் மீறி
வாய் கத்தியது:

''அம்மா சொன்ன
ஐயரே போதும்.''

# உறுமீன் வருமளவும்...

❖

வீர வலசை
விவசாயி போல
மாறு வேடத்தில்
மந்திரி வந்தார்......

ஆட்சித் தலைவர்
அலுவ லகத்தில்
உட்கார்ந் திருந்தவோர்
ஊழிய ரிடம்போய்
விவரம் ஏதோ
வேண்டும் என்றார்;
இரண்டு தாளை
எடுத்து நீட்டினார்.

மாட்டேன் என்றே
மறுத்தார் ஊழியர்.

மந்திரி மகிழ்ந்தார்;
தம்துறை ஊழியர்
நேர்மையை நினைத்து
நெஞ்சங் குளிர்ந்து
சென்றார் வெளியே...

சென்றதும் ஊழியர்
திருவாய் மலர்ந்தார்...

'பத்து ரூபாய்க்கா
பார்த்துச் சொல்வேன்
அவ்வளவு எளிதாய்?
அலைய விட்டுநான்
அப்புறம் கறப்பேன்
அறுபது எழுபது...'

# பழம் நீ அப்பா!

❖

சிறுமலைப் பழம்ஒரு சீப்பும்
பலாப்பழச் சுளைகள்
பத்துப்பன் னிரண்டும்
சிவந்த ஆப்பிள் ஐந்தாறும்
தின்றபின்
மாம்பழம் இங்கே
வரத்தில்லையே
என்று கேட்டவாறு
இருமிக் கனைத்துப்
பாகவதர் கனிந்து
பாடத் தொடங்கினார்:
''பழம்நீ அப்பா பழம்நீ...''

அப்பன் முருகன்
அலறி ஓடினான்.

# முதலுக்கே மோசம்

❖

யோகி ஒருவர்,
வெள்ளிக் கிழமை
விடியற் காலம்
தண்ணீரில்தான்
நடக்கப் போவதாய்
விளம்பரம் செய்தார்;
வேண்டிய மட்டும்
காணிக்கை அவர்
காலில் குவிந்தது.

பிறகு
குறித்த நாளில்
குறித்த நேரத்தில்
நீரில் யோகியார்
நிசமாய் விழுந்தார்.
விழுந்தெழுந்து
எழுந்து விழுந்து......
பிறகு தரையில் நடக்கவும்
முடியாது போனார்!

# இளந்தமிழனின் கண்டுபிடிப்பு

❖

ஆர்க்கிமிடீஸ் முதல்
ஐன்ஸ்டீன் வரை
இங்கு
ஆயிரம் ஆயிரமாக
அந்நியர்
கண்டு பிடிப்பு
கணக்கைப் பெருக்கினர்......
ஆயினும்
'கடன்
அன்பை முறிக்கும்,'
என்றே
உருப்படியாக ஒன்றைக்
கண்டு பிடிக்க
யாரால் முடிந்தது-
எங்கள்
இளந்தமிழனைத் தவிர!

# நாங்கள் நினைத்தால்...?

❖

நாங்கள் நினைத்தால்
நாலே நாளில்
பக்கத்தில் உள்ள
பட்டிகட் கெல்லாம்
போக்கு வரத்துப்
போய்வர நல்ல
பாதை போடுவோம்......

நாங்கள் நினைத்தால்
பாதையில் போய்வரும்
போக்கு வரத்தைப்
பொசுக்கிப் போடுவோம்...

நாங்கள் மாணவர்கள்!

# சரண்

ம.பி. முதல்வர்
மகிழ்ச்சி அடைகிறார்......
காட்டில் மலையில்
கண்படா திருந்த
இரவுக் கொள்ளையர்
இதயம் வெளுத்துச்
சரணடைந் தார்களாம்
சபதம் செய் தார்களாம்

ம.பி. முதல்வர்
மகிழ்ச்சி அடைகிறார்......

அது சரி,
நாட்டில் தெருவில்
நடமாடு கின்ற
பாக்கி யுள்ள
பகற்கொள் ளையர்கள்
என்றைக்குச் சரண்
அடைய எண்ணமாம்!

'ம.பி. முதல்வர்
மகிழ்ச்சி அடைகிறார்.
மக்கள் எப்போது
மகிழ்ச்சி அடைவதாம்?

# மாயம்

❖

மண்ணைக் கொடுத்தால்
சர்க்கரை யாக
மாற்றுவா னாம் ஒரு
மாயக்காரன்......

இதனைப் போய்ச்சிலர்
பெரிதாய்ப் புகழ்கிறார்

நாங்கள்
ஆட்டக் காரரை
அனுப்பி வைத்தால்
கடத்தல் காரராய்
மாற்றி அனுப்புவாய்-
அடடா உன்றன்
மாயமே மாயம்
மலாய் பூமியே!

# எதிரொலி

❖

பெரிய நாட்டின்
பிரதமர் பொறுப்புடன்
மந்திரி மார்கள்
மத்தியில் சொன்னார்:

''விருந்தைக் குறைப்பீர்!
வெளிநாட் டுக்குப்
பறந்து போகும்
பழக்கம் குறைப்பீர்

தொலைப்பே சியிலே
சலசல வென்றே
பேசித் தொலைப்பதைப்
பெரிதும் குறைப்பீர்

குளுகுளு காரில்
கூட்டங்களுக்குச்
செல்வதைக் குறைப்பீர்
செலவைக் குறைப்பீர்......!''

எங்கோ இருந்தோர்
எதிரொலி கேட்டது:

''பிரியம் மிகுந்த
பிரதமரே
உமது
மந்திரி சபையின்
எண்ணிக்கையை நீர்
கொஞ்சம் குறைப்பீர்
கொஞ்சம்......''

# நவயுகக் காதல்

❖

உனக்கும் எனக்கும்
ஒரே ஊர்-
வாசு தேவ நல்லூர்......

நீயும் நானும்
ஒரே மதம்......
திருநெல் வேலிச்
சைவப் பிள்ளைமார்
வகுப்புங் கூட......

உன்றன் தந்தையும்
என்றன் தந்தையும்
சொந்தக் காரர்கள்-
மைத்துனன் மார்கள்

எனவே
செம்புலப்பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே

# துண்டு விழுந்தது

❖

அந்தி மாலையில்
அந்த மேடையில்......

'இங்கே பலப்பல
இரங்கற் கூட்டம்
நடப்ப துண்டு.'
நானும் தலைமை
வகிப்ப துண்டு.,
உங்கள் முயற்சியை
வாழ்த்துவ துண்டு.,
மக்களும் கேட்டு
மகிழ்வ துண்டு.........

தலைவர் வாயில்
அடிக்கடி துண்டு
விழக் காரணம்-அவர்
கழுத்தில் துண்டு
விழாக் காரணமென
விரைவில் புரிந்தது

# அவசரக்காரன்

❖

மூன்று வருடம் முன்னால்...

அருப்புக் கோட்டை
அழகர்சாமி
காசநோயின்
காரண மாக
இருமி இருமி
எலும்பாய் மாறி
ஆஸ்டின் பட்டி
அரசினர்
மருத்துவ மனைக்கு
மனுப்போட்டானாம்-
வந்து தங்கி
வைத்தியம் பார்க்க.

போன செவ்வாயோ
புதனோ
அவனுக்கு
அனுமதி வழங்கி
அஞ்சல் போனதாம்!

அதற்குள் என்ன அவசரம்?

போனமார் கழியிலோ
தையிலோ,
பொல்லாக்
காலன் போட்ட
கடிதம் கண்டதும்
போய்ச்சேர்ந் தானாம்
புத்தியில் லாமல்!

அழகர் சாமி
அவசரக் காரன்!

# சிந்தனை ஒன்றுடையார்

❖

மராட்டியத்தில்
சிவாஜி சேனை
வங்காளத்தில்
துர்க்கா சேனை
அரியானாவில்
ஆசாத் சேனை
கர்நாடகத்தில்
திப்பு சேனை
கேரள சேனை
ஆந்திர சேனை

அம்மா தாயே,
உன்றன் புதல்வர்
சோடை போகவில்லை
உன்னைப் போலவே
சிந்தனை ஒன்றுடையார்!

## ‘இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி...’

❖

''வெள்ளைத் தாளின்
விலையேற் றத்தை
எப்படித் தடுப்பது?...''

இருக்கவே இருக்கிறது
இந்தியப்
பாதுகாப்புச் சட்டம்-
கற்றை கற்றையாய்க்
கண்டபடி எழுதிக்
கவியரங் கேறும்
கவிகளை உடனே
கைது செய்தால்போதும்
சடசட வென்றே
சரிந்து விழும்!

## ‘உயிருள்ள பத்திரிகை’

❖

லாரி மோதி
மாடு சாவு
மாடு முட்டிக்
கிழவி மரணம்

கணவன் மனைவியின்
கழுத்தை அறுத்தான்

மருமகன் மாமன்
மண்டையை உடைத்தான்

இவை தாம்
என் தமிழ் இனத்தை மேலே
உயர்த்த வந்த
ஒரே உயி ருள்ள
பத்திரி கையிலே
பளிச்சிடும் செய்திகள்.

# பல்லவி

❖

''இறந்த பின்னால்
என்னைப் பற்றி
எழுத வேண்டும்
இயலுமா உம்மால்?''

''இந்த வினாடியே
எழுதத் தயார்நான்......

சத்திரம் வைத்தார்
சாவடி அமைத்தார்
மரங்கள் நட்டார்
தண்ணீர் போட்டார்...
தப்பு ஊற்றினார்''

''அடடா போதும்
அண்டப் புளுகரே!
இனிமேல் நீரே
எனது பரம்பரைச்
சரித்திரப் பண்டிதன்
சம்மதம் தானே?''

# மானியம் இழந்த மறுநாள்...

❖

எங்கள்
மாஜி மன்னர்
மானியம் இழந்த
மறுநாள் நண்பகல்
பத்துக் காசைத்
தொலைத்து விட்டுக்
கண்டு பிடிக்கக்
கட்டளை யிட்டார்

நானும்
கோடைக் காலக்
கொளுத்தும் வெயிலில்
தேடித் தேடி
அலுத்துப் போனேன்.
கடைசியில்
பையில் இருந்த
பத்துக் காசைக்
கையில் எடுத்துத்
தரையில் போட்டுக்
கண்டு பிடித்ததாய்க் கத்தினேன்.

மாஜி மன்னர்
மகிழ்ந்து போனார்
மானியம் மீண்டும்
வந்ததைப் போல!

சுவைஞர்!

❖

அந்த
நந்த வனத்தில்
கலாப மயிலைக்
கண்ணிமைக் காமல்
பலாப்பழத் தொந்தி
படைத்த ஒருவர்
பார்த்தவா றிருந்தார்......
பக்கம் சென்றுநான்
மயில்மேல் அதிகப்
பிரியமோ என்றேன்

'ஆர்' சொன்னார்? 'மயில்
கறிமேல்' என்றார்

# தலை குனிவு?

❖

பாரதச் செல்வனும்
அந்நியச் சிறுவனும்
தத்தம்
தேசப் பெருமை
பேசலானார்......

"எங்கள் நாட்டில்
நாய்கள் பற்பல
குட்டிகள் போடும்......"

"எங்கள் நாட்டில்
மட்டும் என்னவாம்?"

"எங்கள் நாட்டில்
பன்றிகள் பற்பல
குட்டிகள் போடும்......"

"ஆச்சர்யம் இதில்
என்னவாம்......
அங்கும் அப்படியே!!"

''எங்கள் நாட்டில்
கட்சிகள் பற்பல
குட்டிகள் போடும்.....''

அந்நிய சிறுவன்
அமைதி யாகத்
தலையைக் கீழே
தொங்கப் போட்டான்.

# செய்யும் முறை

❖

அவர்
சிவப்பு விளக்குச்
சிறுகதை எழுதிச்
சேர்த்த பணத்தைச்
செலவு செய்வது எப்படி
என்று
சிந்தனைத் தேரில்சென்றார்

பின்னர்
சிவப்பு விளக்குத்
தெருவில் நின்றார்

# விசேஷ நிருபர்

❖

சீமான் வீட்டுத்
திருமணப் பந்தல்
பற்றி எழுதுவேன்
பத்தி பத்தியாய்

இரண்டு லட்சம்பேர்
இருக்கத் தக்க
பந்தல் என்பேன்

அதை
மூன்று லட்சம்பேர்
தினமும் காண
வரிசை வரிசையாய்
வருகிறார் என்பேன்.

நான் தான்
வீர மணியின்
விசேஷ நிருபர்

# வீரமும் விவேகமும்

❖

வியட்நாம் யுத்தம்
ஏன் நின்றது?

அமெரிக்கப் படை
வீசிய
'நப்பாம்'
குண்டில்
இருந்த பித்தளையைப்
பெயர்த்தெடுத்தே
ஆயுதம் செய்து
விரட்டி அடித்தனர்
விடுதலை வீரர்-
வியட் நாமியர்!

இந்தியாவில்
அமெரிக்கன் ரிப்போர்ட்டர்
ஏன் நின்றது?

இலவசமாய் அதை
வாங்கிக்

கடையில் நிறுத்துப்போட்டுக்
கிடைத்தப் பணத்தில்
'சோவியத் நாடு'
சந்தா அனுப்பினர்
எங்கள்
பாரதத்தினர்?

## மறுபக்கம்

❖

மகாத் மாவின்
சிலையைச் செய்ததில்
மாபெரும் மோசடி யாமே!

ஆத்திரம் வேண்டாம்
அன்பரீர்......
மோசடி செய்ததற் கிடையில்
ஏதோ
சிலையும் செய்ததாய்
நினைத்துக் கொண்டால்
நெஞ்சம் மகிழ்ந்து போவீர்!

# அரம் போலும்...

❖

எங்கள்
தேசிய மயம்
அரம் போன்றது......

'இதுபோல் பளபளப்பு
இல்லை'
என்று மக்கள்
ஏத்திப் புகழத்
தனியார் துறையைச்
சரியாய்த் தினமும்
கூர்மைப் படுத்திக்
கொடுக்கும்...

# கொ(டு)த்து வைத்தவர்

❖

என்னருந் தமிழ்தாய்
ஈன்ற மக்களே!
உங்களைப் போல
உலகில் யாரே
கொடுத்துவைத்தவர்......!

சினிமா அரங்கில்
அரசியல் கூத்து;
அரசியல் மேடையில்
சினிமாச் சண்டை.

ஒரேஒரு கல்லில்
இரண்டு மாங்காய்......

உங்களைப் போல
உலகில் யாரே
கொடுத்து வைத்தவர்!

# கல்வி சிறந்த தமிழ் நாடு

❖

பி.யு.சி.யா?
ஒரு நூறு போதும்.

பி.எஸ்சி.பி.எட்
இருநூறு ஆகும்.

எம்.எஸ்சி. ஆயிரம்
எம்.பி.பி.எஸ்.
ஏழு ஆயிரம்.

இங்கே
சேர வாரும்
செகத் தீரே!

# தங்க முதலாளி

❖

ஒருநாள் ஒருபொழு தேனும்
நான் உண்ணாமல்
தான் உண்ண மாட்டார்......

கொக்காகட்டும்
கோழியாகட்டும்
எதுவாகட்டும்
எனக்கே முதலில்

மூக்குப் பிடிக்கத்
தின்று முடித்து நான்
மூச்சு விடுவதைப்
பார்த்த பிறகுதான்
இலையில் கையை
எடுத்து வைப்பார்......

உயிரையே என்னிடம்
ஒளித்து வைத்துள்ளார்......
எங்க முதலாளி
தங்க முதலாளி

# கேப்பையில் நெய்வழியும் என்றால்...

❖

கெட்டேன்
பெரிய மனிதனின்
பேச்சைக் கேட்டுக்
கெட்டேன் கெட்டேன்!

இப்போது
சீனிக்கொன்று
சீமை
எண்ணெய்க்கொன்று
மைதா
மாவுக்கொன்று
எருமைப்
பாலுக்கொன்று
புழுத்த
அரிசிக்கொன்று
என்று
ஐந்துக்குமேலேவேண்டுமே!

இரண்டுக்கு மேலே இல்லையே!

## கத்தி... வந்தது
## டும்.. டும்.. டும்..

❖

ஒரு நாள் காலையில்
உள்ளம் அதிர
ஒரு குரல்:
சிவனார் ஏறும்
ரிஷப வாகன
வெள்ளித் தகடு களவு

ஒரு நாள் மாலையில்
ஒலிபெருக்கியில்
காது கிழிய
ஒரு குரல்

தர்ம கர்த்தா
தங்கமணிக்கு
வெள்ளிவீரவாள் பரிசு

# கண்ணன் காட்டிய வழி

❖

பலரிடம் திருடி
ஒருத்திக் குதவி
அவன்
அனாதை ரட்சகன் ஆனான்

ஊரைச் சுரண்டி
வழிவிடு முருகன்
திருக்கோயிலுக்குக்
குடமுழுக் காட்டி
இவன்
பெரிய தருமிஷ்டன் ஆனான்

கந்து வட்டிக் கந்தசாமி
கண்ணன் காட்டிய வழியில்!

# கடமையைச் செய்...

❖

பத்து மணிக்குச்
சரியாய் நுழைந்தேன்

கூட இருப்போரிடத்தில்
கொஞ்சம்
குசல விசாரணை

தலை வலித்தது.
தேநீர் குடிக்க
நாயர் கடைக்கு நடந்தேன்

ஊரில்இருந்து
யாரோ வந்தார்
ஒருமணி நேரம்
உரையாடல்

இடையில்
உணவை மறக்கலாமா?

உண்டு தீர்த்த
களைப்புத் தீர

ஒரு
கன்னித் தூக்கம்

முகத்தை அலம்பிச்
சிற்றுண்டி நிலையம்
சென்று திரும்பினேன்

வேகமாய்
விகடனும் குமுதமும்
படித்து முடித்தேன்

மெல்லக்
காகிதக் கட்டை எடுத்துத்
தூசியைத் தட்டித்துடைத்துக்
கடமையைச் செய்யத்
தொடங்கும் போது...
கதவை அடைத்தான்
காவற் காரன்

மணி ஐந்தாயிற்றாம்!

## எழுத்தறிவித்தவன் இறைவன்:

தேவைஇருக்கக்
கூடாது என்றுதான்
தெய்வமாய் ஆக்கி வைத்தோம்.

அதற்குப் பிறகும்
அது இது வேண்டும்
என்று சும்மா
அலட்டினால்......
மூச்......

# தப்பில்லாமல்

❖

மூன்று வயதில்
ஞானசம்பந்தர்
பாடினாராம்
தோடுடைய செவியன் என்று

இப்போதும்
அதே வயதுப்
பாலகர்கள்
பாடுவார்கள்
தோடுடைய செவியள் என்று-
தப்பில்லாமல்.

# பஞ்சப்படி

❖

மூட்டை மூட்டையாய்
முதுகில் சுமையை
ஏற்ற மட்டும்
ஏற்றி விட்டு
ஒரே ஒரு துரும்பை
எடுத்துப் போட்டதும்
பாரம் எல்லாம்
பறந்து போனதாய்
எப்படி உன்னால்
மகிழ முடிந்ததோ?
ஓ......
பாலைவனத்தில்
பயணம் போகும்
ஒட்டகமே!

# ஒன்றே செய்க

❖

சுடுங்கள்......
உணவுகோரிக்
கிளர்ச்சி செய்தால்!
உடனே சுடுங்கள்

மக்களைக் காக்க
முடிய வில்லையே
என்ற கவலை எதற்கு?

சட்டம் ஒழுங்கை யேனும்
சரியாய்க் காத்தால் போதும்......

சுடுங்கள்......
சும்மா சுடுங்கள்

## உயர்ந்த பள்ளம்!

❖

எங்கள் ஊருக்கு
எதிரிலோர் பள்ளம்...

இன்று நேற்றா
இருபது வருடமாய்
நின்று கொண்டிருக்கும்
நெடிய பள்ளம்

எங்கள்
ஊரின் பெயரோ
உறங்கான் பட்டி
உச்சரிப் பதுவோ
உரங்கான் பட்டி

மாட்டு வண்டிகள்
மட்டு மல்லாமல்
கனதன வான்களின்
கார்களும் கூடப்
பாதையில் இருக்கும்
பள்ளம் வந்ததும்
பணிவாய்ப் போகும்;
பாம்பாய் ஊரும்:

சமத்துவப் பாடம்
சாற்றும் இந்த
உயர்ந்த பள்ளத்தின்
வெள்ளி விழாவைக்
கொண்டாடு தற்குக்
குழு அமைத்துள்ளோம்.
முதல்வர் உட்பட
முக்கியமான
அமைச்சர் பலரை
அழைக்கப் போகிறோம்.

ஆனால்...
அடுத்த ஊர்ப்பள்ளி
ஆண்டு விழாவில்
பரிசு வழங்க
வந்த போது
வேறு பாதையில்
காரை விடுத்த
மராமத் தமைச்சரை மட்டும்......
மாட்டோம்... மாட்டோம்.

எங்கள்
ஊரின் பெயரோ
உறங்கான் பட்டி
உச்சரிப்பதுவோ
உரங்கான்பட்டி

# இடைவேளை

❖

பள்ளி திறந்தது;
அ-சொல்லிக் கொடுத்தோம்

அப்புறம்......
அறுவை சிகிச்சைக்கு
ஆளைப் பிடிக்க
வலையை வீசப் போனோம்

அப்புறம்...
சீனி அட்டையைத்
தெருத் தெருவாக
விநியோகிக்கப் போனோம்.

அப்புறம்... வாக்குப் போடும்
மன்னர் தொகையைக்
கணக்கெடுக்கப் போனோம்

தேர்வு வந்தது;
ஃ-சொல்லி முடித்தோம்.

# நான் அவன் நண்பன்

❖

நான் அவன் நண்பன்;
நல்ல நண்பன்......
ஏன் அவன் இப்படி......

ஏன் அவன் இப்படி
இருக்கிறான்?
கண்ணோ தூர்ந்த கிணறு
கன்னமோ ஓய்ந்த களத்துமேடு
உதடோ வறண்ட வரப்பு
முகமோ கோடைக்கால வயல்...
ஏன் அவன் இப்படி...
எனினும் இன்றவன்
பட்டுடை பூண்டுள்ளான்;
பரிமளம் பூசியுள்ளான்;
மாப்பிள்ளை மாதிரி
மல்லிகை மாலை
மார்பினில் சூடியுள்ளான்.
பற்பல மாநில ஒப்பனைக்காரர்
பக்கம் சூழ்ந்துள்ளார்.

அவனைப்
பார்த்துச் சிந்தையில்
பரவசச் சித்திரம்

தீட்ட முயல்கிறாள்
திலக வதியாள்......

வெம்பிப் போனவாழ்வை
விட்டெறியாமல் இன்னும்
தம்பிக்காகத் தானாம்-அத்
தமக்கை வைத்துள்ளாளாம்

இன்று
அவள் கண்களிலே
ஆனந்தக் கண்ணீர்.
தந்தை படத்தையும்
தாத்தா படத்தையும்
வந்தனை செய்கிறாள்......
தம்பியை வளர்த்து
ஆளாக்கி விட்டதாய்
அகம்குளிர் கின்றாள்......

இதோ அவள் தம்பியின்
ஏற்றம் பேச
வரிசையாய்ச் சிலர்
வருகிறார்......
தம்பிக்கு இனிமேல்
சுக்கிர திசையாம்
வங்கிகள் அனைத்தும்
வாரித் தருமாம்
அரசர்கள் கொட்டம்
அடங்கி விட்டதாம்
இனி அவன் எங்கும்
அட்சய பாத்திரம்
ஏந்தும் அவசியம்
நிச்சயம் இல்லையாம்... நிசமாய்

உச்சி குளிர
மெச்சிப் புகழ்கிறார்
காது களுக்குக்
கனத்த விருந்து
என்றன்
விழிகள் மட்டும் விடுமா?
அவன் மேல் பாய்ந்தன...

இதோ அவன்
''கேக்'' வெட்ட எழுகிறான்
கால்களோ தடுமாறு கின்றன;
தமக்கை
கைகளோ விரைந்து தாங்குகின்றன...
பாவம்
நாண் ஏற்றியதோர் வில்லைப் போல
''விண்'' என்றிருக்க வேண்டிய
பிள்ளை
தேரை விழுந்த தேங்காய் போலத்
தேகம் மெலிந்து
தேய்ந்து போயுள்ளான்.
அவனது
முகவாசலிலே முதுமைச் சிறுக்கி
புள்ளி வைக்கிறாள் கோலம் போட...
எனினும்
இதோ அவன் 'கேக்' வெட்டுகிறான்.

நேற்று வரைக்கும்
வயிறு நிறையக்
கூழ் குடித்தானோ என்னவோ...

போகட்டும்-
இன்றவன் பிறந்த நாளாம்;

இருபத்தைந்தாம் வயதை எட்டிப்
பிடித்து விட்ட
சிறந்த நாளாம்!
வானை நோக்கி
வாழ்த்து மழைகள்......

நான் அவன்
பாதாதி கேசம் பார்க்கிறேன்......
பளிச்சென்று கண்ணில்
படுகிறதோர் நரை!
''இது என்ன இந்த வயதில்
இளம் வயதில்?'' என்கிறேன்.
பக்கத்தில் நிற்கும் பாகவதரோ
''தம்பி தங்கக் கம்பி-அவன்
தலையில் வெள்ளிக் கம்பி''

என்று
பல்லவி இசைத்துப்
பாடத் தொடங்கினார்......

நான்......
நான் அவன் நண்பன்;
நல்ல நண்பன்!

# கவிஞர் மீராவின் பிற நூல்கள்

| | |
|---|---|
| குக்கூ | 30-00 |
| மூன்றும் ஆறும் | 35-00 |
| கோடையும் வசந்தமும் | 60-00 |
| மீரா கவிதைகள் | 60-00 |
| கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள் | 50-00 |
| வா இந்தப் பக்கம் (கட்டுரை) | 30-00 |
| மீரா கட்டுரைகள் | 80-00 |





